**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No. 78/2015**

**வழக்கு சாட்சி: PW.19**

**தேதி: 27.11.2024**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | **வைரமுத்து** | **ஜாதி:** | |
| **தந்தை பெயர் :** | | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுகா:** | | **வயது:** | |

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை:**

நான் விருதுநகர் இயங்கும் தடய அறிவியல் ஆய்வகத்தில் உதவி இயக்குநராக பணியாற்றி வருகிறேன். சிப்காட் காவல் நிலைய குற்ற எண்.3/2015 வழக்கு சம்பந்தமாக எங்கள் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்ட மொத்தம் 19 அயிட்ட சொத்துக்கள் சம்பந்தமாக எங்கள் ஆய்வகத்தில் ரசாயண பரிசோதனை செய்யப்பட்டது. அந்த 19 அயிட்ட சொத்துக்கள் குறித்து ஏற்கனவே உயிரியல் அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிக்கை என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அந்த அறிக்கை ஏற்கனவே அ.சா.ஆ.21 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த 19 அயிட்ட சொத்துக்களில் குருதி வடிநீர் பரிசோதனை சம்பந்தமான ஆவணத்தை கொண்டு வந்துள்ளேன். அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். (அதன் நகல் எதிரிக்கு சார்பு செய்யப்படுகிறது.) அது **அ.சா.ஆ.22** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதில் உயிரியல் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 16 அயிட்ட சொத்துக்களில் இருந்த ரத்தத்துடன் இறந்த நபர்களின் உடல்களிலிருந்து எடுக்கப்பட்ட ரத்த மாதிரிகள் 17, 18, 19 உடன் ஒப்பீடு செய்து பார்த்ததில் 17, 18 (ராஜேஸ்வரி, தனபாக்கியம் ) "பி" குரூப் வகையை சார்ந்தது என்றும் 19 (ஆறுமுகம்) "ஓ" குரூப் வகையை சார்ந்தது என்றும் கண்டறியப்பட்டது. அயிட்டம் 1, 3, 4, 5ல் இருந்த ரத்தம் (ராஜேஸ்வரி இறந்ததாக கூறப்படும் இடத்திலிருந்து எடுக்கப்பட்டதாக கூறப்படும் மண் மற்றும் ராஜேஸ்வரியின் உடைகள் சம்பந்தமானது) "பி" குரூப் ரத்தம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. 6, 8, 9, 10 ல் இருந்த ரத்தம் ( தனபாக்கியம் இறந்ததாக கூறப்படும் இடத்திலிருந்து எடுக்கப்பட்டதாக கூறப்படும் மண் மற்றும் தனபாக்கியத்தின் உடைகள் சம்பந்தமானது) "பி" குரூப் ரத்த வகையை சார்ந்தது என கண்டறியப்பட்டது. 11, 13, 14, 15ல் இருந்த ரத்தம் (ஆறுமுகம் இறந்ததாக கூறப்படும் இடத்திலிருந்து எடுக்கப்பட்டதாக கூறப்படும் மண் மற்றும் ஆறுமுகத்தின் உடைகள் சம்பந்தமானது) "ஓ" குரூப் ரத்த வகையை சார்ந்தது என கண்டறியப்பட்டது.

16வது அயிட்டம் அருவாளில் மாதிரிக்காக மூன்று பகுதிகளில் இருந்த ரத்தத்தை ஏ, பி, சி என பிரித்து பரிசோதித்ததில் அதில் ஏ, பி தொகுதியில் "பி" குரூப் ரத்தம் இருந்ததாக கண்டறியப்பட்டது. "சி" தொகுதியில் மனித ரத்தம் இருந்தது கண்டறியப்பட்டது. ஆனால் அதன் வகையை அறுதியிட்டு கூறஇயலவில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

ஆய்வாளர் என்னை விசாரித்தார். ஆனால் வாக்குமூலம் எதுவும் பதிவு செய்யவில்லை. அ.சா.ஆ.22ல் 17, 18, 19 அயிட்டம் என்பது என்ன என்று குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் குறிப்பிடப்படவில்லை. ஆனால் அது உயிரியல் அறிக்கை அசா.ஆ.21ல் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சாட்சி கூறுகிறார். 2, 7, 12 அயிட்டங்களில் ரத்தம் எதுவும் காணப்படவில்லை (அவைகள் ரத்தம் படாத மண் என்று சாட்சி கூறுகிறார்). ரத்தம் பாசிட்டிவ், நெகட்டிவ் என்று குறிப்பிடப்படவில்லை என்று சொன்னால் காயாத ரத்தத்தில் தான் குறிப்பிடமுடியும். காய்ந்து போன ரத்தத்தில் அவ்வாறு கண்டறியமுடியாது. அயிட்டம் நம்பர் 16ல் தொகுதி 1, 2ல் "பி" குரூப் ரத்தம் வகை இருந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.22 அறிக்கையில் என்னென்ன பொருட்கள் அனுப்பப்பட்டுள்ளது என்று குறிப்பு இல்லை என்று சொன்னால் குறிப்பு இல்லை. (அது முந்தைய அறிக்கையின் தொடர்ச்சியே அ.சா.ஆ.22 என்று சாட்சி கூறுகிறார்). அ.சா.ஆ.22 முழுமையான அறிக்கை இல்லை என்று சொன்னால் அது சரியல்ல. அரசு அலுவலர் என்பதால் ஆய்வாளருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் அது சரியல்ல. ஆய்வாளர் சொன்னதின் பேரில் மேற்படி அறிக்கையை அவர் சொன்னபடி தயாரித்துள்ளேன் என்று சொன்னால் அது சரியல்ல. மேற்படி அறிக்கையில் என்னுடைய கையெழுத்து இல்லை. மேற்படி அறிக்கை மதுரை வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திலிருந்து பெற்று தாக்கல் செய்கிறேன். மேற்படி பரிசோதனையை நான் மேற்கொள்ளவில்லை.

**வாக்குமூலம்**

**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், சிவகங்கை**

**வழக்கு எண். SC.No. 78/2015**

**வழக்கு சாட்சி: PW.20**

**தேதி: 27.11.2024**

| | | |
|---|---|---|
| **பெயர்:** | **சித்திரைசெல்வி** | **ஜாதி:** |
| **தந்தை பெயர் :** | | **தொழில்:** |
| **கிராமம்:** | | **சமயம்:** |
| **தாலுகா:** | | **வயது:** |

**சாட்சி ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை:**

நான் தற்சமயம் குழந்தைகள் கடத்தல் தடுப்புப் பிரிவில் சிவகங்கை காவல் ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். நான் தற்சமயம் மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலைய காவல் ஆய்வாளர் பொறுப்பை கூடுதலாக கவனித்து வருகிறேன். மேற்படி மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் 07.07.2014ம் தேதி மானாமதுரை தாலுகா, வேலூர் கிராமத்தை சேர்ந்த பாண்டிதுரை என்பவரின் மனைவி ராஜேஸ்வரி என்பவர் கொடுத்துள்ள புகாரின் அடிப்படையில் மேற்படி காவல் நிலைய குற்ற எண்.9/2014 பிரிவுகள் 498(ஏ), 294(பி), 506(2)ன் கீழ் வழக்கு சார்பு ஆய்வாளர் அல்லிராணி என்பவரால் பதிவு செய்யப்பட்டுள்ளது. அந்த புகாரின் உண்மை நகலை கொண்டு வந்துள்ளேன். அது **அ.சா.ஆ.23** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன்படி பதிவு செய்யப்பட்டுள்ள முதல் தகவல் அறிக்கையின் உண்மை **அ.சா.ஆ.24** ஆகும். புகார்தாரர் எழுதிக் கொடுத்ததின் அடிப்படையில் அந்த வழக்கின் மேல்நடவடிக்கை கைவிடப்பட்டது. அது சம்பந்தமான அறிக்கையின் உண்மை **அ.சா.ஆ.25** ஆக குறியீடு செய்யப்படுகிறது. (மேற்படி ஆவணங்களின் நகல் எதிரிக்கு சார்பு செய்யப்பட்டது)

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

அ.சா.ஆ.25ல் இந்நிலையில் இவ்வழக்கின் வாதி ராஜேஸ்வரி என்பவர் நிலையம் வந்து ஆஜராகி தனக்கு ஆவணி 1ம் தேதி சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் ஆண் குழந்தை பிறந்ததாகவும் தனது கணவரும் கணவர் குடும்பத்தினரும் தன்னையும் தன் குழந்தையையும் அழைத்துச் சென்று நல்லபடியாக பார்த்துக் கொள்வதாகவும் தானும் தன் கணவரும் சேர்ந்து வாழ்ந்து வருவதாகவும் தனது அம்மாவை அடித்துவிட்டதால் கோபத்தில் மிகைப்படுத்தி எழுதிக் கொடுத்ததாகவும் தான் மானாமதுரை அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் மீது தொடர்ப்பட்ட குற்ற எண்.9/14 பிரிவுகள் 498(எ), 294(பி), 506(2) வழக்கின் மீது மேல்

நடவடிக்கை வேண்டாம் என்றும் இந்த வழக்கு சம்பந்தமாக நீதிமன்றத்தில் நிவாரணம் தேடி இனிமேல் மேல்முறையீடு ஏதும் செய்யமாட்டேன் என்றும் இவ்வழக்கை முடித்து மேல்நடவடிக்கை கைவிடும்படி எழுதிக் கொடுத்துள்ளார் என்று சொன்னால் அ.சா.ஆ.25 ல் அவ்வாறு தான் குறிப்பிடப்பட்டுள்ளது. 07.07.2014லிருந்து பிறகு 06.01.2015 வரை இடைப்பட்ட காலத்தில் ராஜேஸ்வரி வேறு எதுவும் புகார் கொடுத்துள்ளாரா என்று கேட்டால் காவல் நிலைய ஆவணங்களை பரிசீலித்து பார்த்தால் தான் தெரியும்.